4 ஜூலை 2021

Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 14 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**உங்கள் வாயைத் திறந்து ஒடுக்கப்பட்டவர்களைக் காத்தல்**



# கடவுள் யாரை விரும்புகிறாரோ அவர்களைத் தேர்ந்துகொள்வார்

கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் பவுல் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்: “ஆதலால் நான் என் வலுவின்மையைப் பற்றித் தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும். ஆகவே என் வலுவின்மையிலும் இகழ்ச்சியிலும், இடரிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கின்றேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்” இது ஒரு ஆழமான மற்றும் முரண்பாடான கூற்று. வலுவற்ற ஒருவர் எவ்வாறு வலிமை பெற்றவராக இருக்கமுடியும்? இந்த முரண்பாட்டின் பொருள் என்ன?

பவுல் கொரிந்து நகரில் பிளவுபட்டிருந்த சபைகளுக்கு இவ்வாறு எழுதுகிறார். அங்கிருந்த நம்பிக்கையாளர்களில் சிலர் பவுல் ஏழை என்பதாலும், சொற்திறன் குறைவு என்றும் எண்ணி, அவரை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இருப்பினும், கிறிஸ்துவின் ஊழியராக இருப்பதில் பவுல் மகிழ்ச்சியடைகின்றார்; ஏனென்றால், கிறிஸ்துவே மனுக்குலத்தை மீட்பதற்காக, தாழ்ச்சி நிறைந்த, துன்புறும் ஊழியரானார். கடவுளின் மாபெரும் அன்பு மற்றும் மீட்பளிக்கும் அருளினால் பவுலைக் காப்பாறியவர் அந்த ஊழியரான கிறிஸ்துவே.

நற்செய்தியில் மற்றுமொரு முரண்பாடான சூழ்நிலையை நாம் காண்கிறோம். இயேசு ஞானத்துடன் கற்பிப்பதையும், மற்ற இடங்களில் அவர் செய்த அருள் அடையாளங்களையும் கேள்விப்பட்ட நாசரேத்து யூதர்கள் இந்த மனிதருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? என்று வியப்புற்றார்கள். ஏனென்றால் யூதர்களின் பார்வையில் இயேசு அவர்களுடைய சொந்த ஊரில் இருந்த, நன்கு அறிமுகமான ஒரு தச்சர் மட்டுமே. யூதசட்டங்களில் தகுதியற்றவர் மற்றும் ஒரு சாதாரண எளிய குடும்பத்தில் பிறந்த ஒருவரை மாட்சிமிக்க கடவுள் பயன்படுத்த முடியுமா?

கடவுள் யாரை விரும்புகிறாரோ அவர்களைத் தேர்ந்துகொள்வார் என்பது நமக்கு நினைவூட்டப்படுகிறது. யார் கடவுளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும், பணி செய்யவேண்டும் என்று மனிதர்கள் வேண்டுமானால் தரத்தையும் கருத்தையும் கொண்டிருக்கலாம். மனிதர்களின் தோற்றம், இறையியல் தகுதிகள் மற்றும் அவர்களின் பேச்சுத் திறன் ஆகியவற்றில் மனிதர்கள் கவனம் செலுத்தலாம். ஆனால் **கடவுளின் தரநிலைகள் மிகவும் வேறுபட்டவை.** கடவுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவரின் சார்பாக பேச அனுப்பும்போது, தரத்தையோ, திறனையோ பார்ப்பதில்லை. ஆனால் கடவுளின் பெயரால் அவர் வழங்கும் செய்தியை அவர் எவ்வாறு கொண்டு செல்கிறார் என்பதையே கடவுள் பார்க்கின்றார்.

நம் மத்தியில் கடவுளின் செய்தியைப் பகிர்ந்துகொள்பவர் ஏழையாகவோ, எளிய தோற்றம் மற்றும் குறைவான பேச்சுத்திறன் கொண்ட சகோதர சகோதரிகளாகவோ இருந்தால், நாம் விரைவில் நிராகரிக்கக்கூடாது அல்லது ஏற்றுக்கொள்ளவோ தவறிவிடக்கூடாது. மனிதக் கண்ணோட்டத்தில் ஒருவரின் தோற்றத்தையோ, தரத்தையோ பார்த்து யாரையும் மதிப்பிடக்கூடாது. ஆனால் கடவுளின் தரநிலையில் கடவுள் தேர்ந்தெடுத்த ஒரு கருவியாக அவர் இருக்கலாம்.

ஏனென்றால், நம் வலுவின்மையின் வழியாக, நம்மைப் பயன்படுத்தி அதில் மகிழ்வடையும் மீட்பரில் நாம் வல்லமை பெற்றவராவோம்.

மனனம் செய்ய இந்த வார வசனம்:

**“என் அருள் உனக்குப் போதும்”**

(2 கொரி:12:9)

**இன்றைய வாசகங்கள்:**

எசேக்கியேல்: 2: 2-5;
திருப்பாடல்: 123: 1-4
2 கொரி 12: 7-10
மாற்கு 6: 1-6

INTERNAL CIRCULATION ONLY
BUL 27/2021

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org